## டிசம்பர் - 10

**"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்." - 1சாமு 2.30.**

கர்த்தருடைய ஊழியத்தின் எப்பகுதியில் நமக்கு அவர் சந்தர்பத்தின் கதவைத் திறக்கப் பிரியமாயிருக்கிறாரோ, உடனே உற்சாகத்துடன் அதில் பிரவேசிக்க வேண்டும். அவருக்காகவும், எந்தக் காரணத்துக்காக அவர் நம்மை அழைத்திருகிறாரோ, அதற்காக ஆர்வத்துடன் பிரவேசிக்க வேண்டும். நாம் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இது ஒரு நிபந்தனையாயிருக்கிறது. நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது, நாம் அசதியாயும், கவலையற்றவர்களாயும் இருந்தோமானால், சந்தேகமில்லாமல் அவைகள் நம்மிலிருந்து எடுக்கப்பட்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும். ஏனென்றால், நம்முடைய சுயேட்சையான நீதி சம்பந்தமான செயலில் தலையிடாமலும் அல்லது அதை பயனற்றதென ரத்துச் செய்யாமலும், அவர் தன்னுடைய விஷயமாக ஊழியம் செய்ய வேறு ஒருவரை எழுப்ப பரிபூரண தகுதியுள்ளவராயிருக்கிறார். தேவனுடைய உடன் உழியக்காரராக இருப்பதிலும், விஷேசமாக நமது கர்த்தரும் எஜமானருமான யேசு இப்பொழுது செய்துகொண்டிருக்கிற இந்தப் பெரிய ஊழியம் சம்பந்தமாகவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறதில் ஜக்கியப்படவும், எவ்வளவு பெரிய ஒரு சிலாக்கியத்தை நாம் அனுபவிக்கிறோம் என்பதை நாம் அதிகதிகமாக உயர்வாக மதிப்போமாக. **- Z 01, 318 (R 2888).**

தேவனைக் கனம் பண்ணுவது என்பது, நம்முடைய ஜீவியத்தில் தேவனை முதலாவதாக வைப்பதென்பதைக் குறிக்கிறது. ஒரு விதத்தில் இது தேவன் உறுதியாக எதிர்க்கிற பிசாசும், உலகமும், மாம்சமும் நமக்கு உள்ளேயும், வெளியேயும் தோற்றுவிக்கிற பாவத்தையும், தப்பான உபதேசத்தையும், சுயநலத்தையும், உலகத்தனத்தையும் நாம் இடைவிடாமலும், வெற்றிகரமாகவும், உறுதியாக எதிர்க்க வேண்டும். என்பதைக் குறிக்கிறது. மற்றொரு விதமாக, இது தேவன் எவைகளுக்கு ஆதரவாக இருக்கிறாரோ, அதாவது, தேவனுடைய வார்த்தையில் தியானமாயிருப்பதும், அதை பரப்புவதும், தேவனுடைய வார்த்தைக்கு, இணக்கமாகக் குணத்தை அபிவிருத்தி செய்வதும், தேவனுடைய வார்த்தையில் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறதினால் வருகிற தீமைகளைச் சகித்தலும், தேவனுடைய வார்த்தைக்கு இணக்கமாக விழித்திருப்பதும், ஜெபம் செய்வதுமாகிய இவைகளுக்கு ஆதரவாக நாம் இடைவிடாமலும், வெற்றிகரமாகவும் உறுதியாயும் இருக்கிறதைக் குறிக்கிறது. அப்படிப்பட்டவர்களைத் தேவன் உண்மையாகவே கனம் பண்ணுவார். இந்த ஜீவியத்தின் பரிசுத்த ஆவியினாலும், அவருடைய வார்த்தையின் அறிவினாலும், ஜெபத்தின் சிலாக்கியத்தினாலும், ஊழியத்தின் சிலாக்கியங்களிலும், பாவம், தப்பான உபதேசம், சுயநலம், உலகத்தனம் ஆகிய இவைகளிலிருந்து பிரிந்திருத்தலினாலும், கிறிஸ்துவைப்போலொத்த நிலையின் அபிவிருத்தியினாலும், அவர்களுடைய போரில் ஜெயத்தினாலும் அவர் அவர்களைக் கனம் பண்ணுகிறார். அடுத்த ஜீவியத்தில், குணத்திலும், சுபாவத்திலும், காட்சிகளிலும், மகிமைப்படுத்தப்படுதலிலும், சகவாசத்திலும், சுதந்திரத்திலும், உத்தியோகத்திலும், வேலையிலும் கிடைக்கிற பெருமையான ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களினாலும் தேவன் அவர்களைக் கனம் பண்ணுவார். **- P 36, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எரே 18.9,10, சங் 18.20, 91.14, 50.23, நீதி 3.9.10, ஏசா 29.13.14, தானி 4.34, மல் 1.6, யோவா 5.23,44, 8.49, 12.26, 13.31,32, 17.4,5, 1கொரி 4.5, 1பேது 1.7.**

**கோபுர வாசிப்பு : Z 15, 173 (R 5703).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் இந்த வசனம் என்னில் நிறைவேறினதா எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன பலன்களோடு?**